வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 | 25.11.2024 திங்கட்கிழமை | இதழ் : 329 | பக்கங்கள் : 12




# இந்தியாவை நாம் நேசிக்கிறோம் சீனா மீதும் அன்பு கொள்கிறோம்

## தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவம்பர் 25

அயல் நாடு என்ற வகையில் இந்தியாவை நேசிக்கின்றோம். அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார மூலோபாயத்தின் அடிப்படையில் எமது கொடுக்கல் - வாங்கல்களில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என தெரிவித்த கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், உலகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற நட்பு நாடு என்ற வகையில் சீனா மீது அன்பு உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் அயல் நாடு இந்தியா. அங்கு 130 கோடி மக்கள் வாழ்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார மூலோபாயத்தின் அடிப்படையில் எமது கொடுக்கல் - வாங்கல்களில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இதனை பகிரங்கமாகவே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு நாங்கள்

11



## வவுனியா மாவட்டத்தில் கடும் மழை பேராறு நீர்த்தேக்க வான்கதவு திறப்பு

வவுனியா, நவ. 25

வவுனியா மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக பேராறு நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஓர் அடி திறக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் முதல் வவுனியாவில் பெய்துவரும் கனமழை காரணமாக வவுனியாவில் பல குளங்கள் நிறைந்துள்ளன.

அந்த வகையில் பேராறு நீர்த்தேக்கத்திற்கான நீர்வரத்து அதிகரித்துள்ளமையினாலேயே

11

## மாகாண சபைத் தேர்தல் முறைமை; சட்ட சிக்கலுக்கு தீர்வு காணப்படும்!

### கூறுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 25

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்த எதிர்பார்த்துள்ளோம் என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத் துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள

11

## தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாக வைத்துப் பேசுவதற்கு தயார்!

### கூறுகிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

கொழும்பு, நவ. 25

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்துள்ளது. அத்தேர்தலின் முடிவுகளை நாம் பார்க்கின்றபோது, தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அவர்கள் அடுத்து வரும் காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான

11

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 25

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படும் சொத்து இழப்புக்கள் தொடர்பாக அனலைதீவு மீனவர்களால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களால் அனலைதீவு கடற்பரப்பில் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை மற்றும் இழப்பீடுகள் ஏற்படுகின்றமை தொடர்பில் அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் என்பன இணைந்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

11

### வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

## வடக்கு, கிழக்குக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 25

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்தில் உருவாகியுள்ள தாழமுக்கமானது இன்று வலுவடைந்து நாட்டின் வடக்கு கடற்பிராந்தியம் நோக்கி நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனால் நாட்டின் கிழக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் 150 மில்லிமீற்றர்

11

## இனப்பிரச்னைக்கு தீர்வு காண நாம் நிபந்தனையற்ற ஆதரவு!

### ராஜித சேனாரத்ன அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி நாட்டின் தேசியப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசாங்கம் செல்லும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

11

## போலி குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு புதிய சட்டம்!

### வேண்டும் என்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 25

அரசியல் களத்தில் முன்வைக்கப்படும் போலியான குற்றச்சாட்டுக்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் புதிய சட்டமியற்றுவதற்கு தனிநபர் பிரேரணையை முன்வைக்கவுள்ளேன். எம் மீதான பொய்யான குற்றச்சாட்டுக்கள் தற்போதைய ஆட்சி மாற்றத்துக்கு ஒரு காரணம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

11

## இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்க ஆராய்கிறது தமிழக அரசு!

சென்னை, நவ. 25

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது.

இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை 1914 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரை கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

பின்னர் ஏற்பட்ட காலநிலை சீர்கேடு மற்றும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் போன்றவற்றின் காரணமாகக் குறித்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புதிய நோயாளர் நலன்புரிச் சங்கம்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நீண்ட காலத்திற்கு பின் புதிய நோயாளர் நலன்புரிச் சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் சனிக்கிழமை கிளிநொச்சியில் தனியார் விருந்தகம் ஒன்றில் பிற்பகல் இரண்டு மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலக மேலதிக பிரதேச செயலாளர், அதன் நிர்வாக உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகத்தில் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் க. விஜய சேகரன் தலைவராகவும், முன்னாள் அரசியல்துறை போராளி வேங்கை செயலாளராகவும், த. செல்வராணி பொருளாளராகவும் பளை இராதுரை உப தலைவராகவும், கபிரியல் லோறன்ஸ் உப செயலாளராகவும். துசிகரன், அதிபர் றொபேட் கெனடி, சிறிரங்கநாதன், மயில்வாகனம், திலகராஜ், ஆனந்தன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கிளிநொச்சி தொண்டமான்நகர் வெள்ள வாய்க்காலினால் ஆபத்து



கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தொண்டமான்நகர் கிராம அலுவலர் பிரிவில் காணப்படுகின்ற வெள்ள வாய்க்கால் மழைக் காலங்களில் பாய்ந்தோடும் வெள்ளம் காரணமாக பல வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் மழைக் காலங்களில் வாய்க்காலில் பெருக்கெடுக்கும் வெள்ளம் காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டு அருகில் உள்ள பல வீடுகளின் அத்திபாரம் பாதிக்கப்படும் அளவுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஒரு சில வீட்டு உரிமையாளர்கள் தங்களது வீடுகளை பாதுகாத்துக்கொள்ள மண் மூடைகளை தற்காலிகமாக அடுக்கி வைத்துள்ளபோதும் பாதிப்பை தடுக்க முடியவில்லை என்றும் மலசல கூடங்கள் கூட வெள்ளத்தால் அரிக்கப்பட்டு இடிந்துவிழும் நிலையில் இப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக குறித்த வெள்ள வாய்க்கால் காரணமாக தாம் பாதிக்கப்படுவதாகவும் வாய்க்காலின் குறிப்பிட்ட சிறிய பகுதி கட்டப்பட்டுள்ள போதும் ஏனைய பகுதிகள் கட்டப்படாது இருப்பதன் காரணமாக வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், கரைச்சி பிரதேச சபை என்பன குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# உலகளாவிய தொழில் முனைவோர் வாரம்: வவுனியா பல்கலையில் விசேட நிகழ்வுகள்

வவுனியா, நவ. 25

உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று முன்தினம் வவுனியா பல்கலைக்கழகத்தில் விசேட நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும் இங்கிலாந்திலுள்ள கேட் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்கால மற்றும் எதிர்கால முயற்சியாளர்களுக்கான முக்கிய செயலமர்வு இடம்பெற்றது.

இதன்போது இந்திய துணை தூதர் சாய் முரளி மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஏ.அற்புதராஜா உட்பட இந்திய மற்றும் வவுனியா பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் உட்பட சுய தொழில் முயற்சியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியா சிறையில் கைதி ஒருவர் மரணம்

வவுனியா, நவ. 25

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர், நேற்று முன்தினம் இரவு சிறைக்கூடத்திற்குள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயற்சித்த கைதி, சிறைக்காவலர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே மரணமடைந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த 57 வயதான நபரே மரணமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கேரளக் கஞ்சாவுடன் முதியவர் கைது!

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உழவனூர் பகுதியில் 1 கிலோ 750 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 64 வயதான முதியவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உழவனூர் பகுதியில் இருந்து நேற்று முன் தினம் மாலை கொழும்பு நோக்கி பயணித்த பேருந்தில், குருநாகல் கொண்டு செல்வதற்காக குறித்த முதியவர் தனது பயண பொதியில் மறைத்து எடுத்துச் சென்றவேளை கைது செய்யப்பட்டார்.

தர்மபுரம் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைதான சந்தேக நபரிடம் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சத்ய சாய் பாபாவின் ஜனன தின நிகழ்வு

கொழும்பு, நவ. 25

பகவான ஸ்ரீத்ய சாய் பாபாவின் 99 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் கொழும்பு பம்பலபிடி சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு ஸ்ரீசத்ய சாய் நிலையத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு கலை அம்சங்களும் நிகழ்வை அலங்கரித்தன.

இதேவேளை கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள ஸ்ரீ சத்ய சாய்பாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் ஜனன தின நிழ்வு நடைபெற்றது. ஜனன தின நிகழ்வை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து ஸ்ரீசத்ய சாய் பாபாவின் திருவுருவச்சிலை புதுச்செட்டித்தெருவிலிருந்து சங்கமித்தை மாவத்தை, விவேகானந்தாமேடு, ஜம்பட்டா வீதியூடாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் ஆலயத்தை சென்றடைந்தது. (அ)

# குப்பை போடுதல், எச்சில் உமிழ்தல் என்பவற்றுக்கு எதிராக புதிய சட்டம்!

கொழும்பு, நவ. 25

வீதிகளில் குப்பைகளை இடுதல் மற்றும் எச்சில் உமிழ்தல் என்பவற்றுக்கு எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புத்தளம் குதியில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையைச் சுத்தமான தொரு நாடாக மாற்றுவதற்கு வீதிகளில் குப்பைகளை வீசுதல், வெற்றிலை எச்சிலை உமிழ்தல் போன்ற செயற்பாடுகளை மக்கள் தவிர்ப்பதுடன், அதனை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்குக் கடுமையான புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டு வர வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (அ)

# தீவகத்தில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ. 25

தீவகம் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளாகிய நேற்று, யாழ் தீவகம் வங்களாவடி சந்தையில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்

நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாவிரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், வேலணைப் பகுதி வர்த்தகர்கள் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# மகிந்த தேசப்பிரியவின் வீட்டில் பொருள் திருட்டு!

கொழும்பு, நவ. 25

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் அம்பலாங்கொடையில் உள்ள வீட்டில் சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மகிந்த தேசப்பிரியவின் மனைவி அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரண்டு எரிவாயு கொள்கலன்கள், ஒரு தொலைக்காட்சி, இரண்டு தங்க நகைகள் மற்றும் நான்கு கைக்கடிகாரங்கள் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பில் வசித்துவரும் மகிந்த தேசப்பிரியவும் அவரது மனைவியும் நேற்றுமுன்தினம் அம்பலாங்கொடையிலுள்ள தங்களது வீட்டுக்குச் சென்றிருந்தபோது, இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளது. (அ)

# திருட்டு குற்றச்சாட்டில் இருவர் கைது ஹெரோயின், போதை மாத்திரை மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் கோவில் - தட்டாதெரு சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை மருத்துவர் ஒருவரின் வீட் டின் முன் நிறுத்திவைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் டிக்கியை உடைத்து பணத்தை திருடிச் சென்ற இருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் குறித்த திருட்டு சம்பவத்தில் ஈடுபடுவது சி. சி. ரிவி கமராவில் பதிவாகிய நிலையில், இருவரையும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், நேற்றுக் காலை நல்லூர் அரசடி பகுதியில் வைத்து கைதுசெய்தனர்.

இவர்கள் கைது செய்யப் படும்போது 10 போதை மாத்திரைகளையும் 240 மில்லி கிராம் ஹெரோயினையும் உடைமையில் வைத்திருந்தனர்.

விசாரணைகளின்போது, அவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்றும் போதைப் பொருள் வாங்கு வதற்காக சிறுசிறு திருட்டுக் களில் ஈடு படுவதாக தெரிய வந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.11.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சீனத் தூதுவரின் கருத்து

தேசிய மக்கள் சக்தியின் அரிய வெற்றியைத் தொடர்ந்து, இலங்கைக்கான சீனத் தூதுவர், வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்திருந்தார். சீனத் தூதுவர் வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்வது புதிய விடயம் அல்ல - ஆனால் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தொடர்ந்து அவரது விஜயம் இடம்பெற்றதால் சற்று கூடுதல் கவனத்தை பெற்றிருக்கின்றது. அவரது விஜயத்தின் போது வடக்கு மக்களின் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் தெரிவித்திருந்த கருத்துக்களே முக்கிய காரணம் - அதாவது, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்னும் கேள்விக்கு சீனத் தூதுவர் அளித்த பதில் - “நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்”.

தமிழ்த் தேசிய அரசியலின் மையமாக வடக்கு மாகாணமே இருந்து வந்திருக்கின்றது. அதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் என்றால் அது வடக்கு மாகாணம்தான் என்னும் புரிதலே தென்னிலங்கைக்கும் ராஜதந்திர சமூகத்திற்கும் உண்டு. அந்த அடிப்படையில்தான் அடிக்கடி வடக்கிற்கு ராஜதந்திரிகள் விஜயங்களை மேற்கொள்வதுமுண்டு. இவ்வாறானதொரு பின்னணியில் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் பெரும்பான்மையாக ஜே.வி.பிக்கு வாக்களித்து, வடக்கு அரசியலிற்கு புதிய முகமொன்றை காண்பித்திருக்கின்றனர். தமிழ்த் தேசிய தரப்புக்களை ஒரு மாற்றாகக் கருதாமல் தேசிய மக்கள் சக்தியை ஒரு மாற்றுத் தலைமையாக கருதியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசிய தரப்புக்களாக தங்களை அடையாளப்படுத்தியிருக்கும் அனைத்து கட்சிகளுமே வடக்கில் தோல்வியுற்றியிருக்கின்றன. உதாரணமாக தமிழ் அரசு கட்சி பொருத்தமற்றது என்று கருதியிருந்தால் வடக்கு மக்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரித்திருக்க வேண்டும் அல்லது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை ஆதரித்திருக்கவேண்டும் ஆனால் அவ்வாறில்லாது முற்றிலும் மாறுபட்ட, கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுகளை முற்றிலுமாக எதிர்த்திருந்த தென்னிலங்கை கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவை ஆதரித்திருக்கின்றனர் - அரசியலில் நீண்ட அனுபவமும் தொடர்புமுள்ள தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை தோற்கடித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தை ஓர் அரசியல் மாற்றமாக புரிந்து கொண்டால், சீனத் தூதுவர் அவ்வாறு கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை மற்றும் மனித உரிமைகள் விவகாரத்தில் கரிசனை கொண்டிராத அதே வேளை தென்னிலங்கையில் எந்த அரசாங்கம் இருந்தாலும் அவர்களுடன் இணைந்து செயற்படுவதை பிரதான கொள்கையாகக் கொண்டிருக்கும் சீனா, அவ்வாறு கூறாதிருந்தால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

எனவே சீனத் தூதுவரின் கருத்திற்கு விளக்கங்கள் வழங்கி நேரத்தை வீணாக்காமல், தமிழ் சமூகம் அரசியலை எவ்வாறு உற்று நோக்க முற்படுகின்றது - குறிப்பாக இளைய தலைமுறையினர் மரபார்ந்த தமிழர் அரசியலிலிருந்து விலகிச் செல்கின்றார்களா? புதிய தலைமையொன்றை அவர்கள் தேடுகின்றார்களா - அவ்வாறனதொரு தலைமைத்துவத்தை ஏன் தற்போதுள்ளவர்களால் வழங்க முடியவில்லை? இந்தக் கேள்விகளுக்கு பதிலை தேடும் முயறசியில்தான் தமிழர் தரப்புக்கள் தங்களது நேரத்தை விரயம் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் வாக்குகளை கூட்டிப் பார்த்து கதைகள் சொல்லும் ஆய்வாளர்கள் என்போர், தங்களின் கற்பனைக் குதிரைக்கு கடிவாளமிடுவதை விடுத்து, நிஜத்திற்கு திரும்புவது அவசியம். நடந்து முடிந்த தேர்தல் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு மட்டுமான தோல்வியல்ல - மாறாக, வடக்கை தளமாகக் கொண்டிருக்கும் கருத்துருவாக்கிகள் ஆய்வாளர்கள் என்போரின் தோல்வியும்தான். முதலில் தங்களின் தோல்வியை ஒப்புக் கொள்ளும் போது மட்டும்தான், ஆரோக்கியமான உரையாடல்கள் உருவாகும்.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024

“சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்,
உனது பரம்பரையின் கனவுகளை
இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்.”
- கவிஞர் வ.ஜ.ச.ஜெயபாலன்



# மூளாயில் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்தார் கடற்றொழில் அமைச்சர்



யாழ்ப்பாணம், நவ. 25

தொடர்ச்சியாக பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட மூளாய்ப்பகுதி (ஜே - 171) மக்கள் அங்குள்ள தேவாலயம் ஒன்றில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் நேற்றுக்காலை நேரில் சென்று சந்தித்து அவர்களது நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“காக்கைதீவு மற்றும் மூளைப் பகுதிகளுக்கு சென்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினோம். அவர்கள் மிகவும் பாதிப்படைந்திருப்பதை நாங்கள் அவதானித்தோம். உண்மையில் இந்த நிலைமைகளுக்கு தீர்வு தேடிக் கொடுக்க வேண்டியவர்கள் அரசாங்கமும், அரசியல்வாதிகளும், அரசு நிறுவனங்களும் தான்.

இது ஒரு தொடர்ச்சியான பிரச்னையாக உள்ளது. எனவே எதிர்வரும் காலங்களில் இந்த இடர் நிலைமையில் இருந்து மக்களை மீட்பதற்கு நாங்கள் சகல வேலைத் திட்டங்களையும் முன்னெடுப்போம்.

இதற்கான செயல்பாடுகளை நாங்கள் அண்மையிலேயே ஆரம்பித்து இருக்கின்றோம். இதன்போது குறித்த பகுதி மக்களின் கருத்துகளையும் நாங்கள் உள்வாங்கி செயல்படுவோம்.

இன்னும் சில நாட்களில் கடும்மழை பெய்யலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் அந்த நிலைமையையும் எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன்- என்றார். (எ-05)

# உடுவில் மகளிர் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம், உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி சைக்கிள் பவனியும் நடைபவனியும் நடைபெற்றது.

சைக்கிள் பவனியானது தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு உடுவில் மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

டானியல் புவரின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி வே. பத்மதயாளனால் பாடசாலைக்கொடி அசைக்கப்பட்டு ஆரம்பித்து



வைக்கப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குங்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும்.

**இடபம்**

திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். புது வேலை அமையும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மிதுனம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். ரெட்டிப்பு லாபம் உண்டு.

**கடகம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வாகனத்தை சீர்செய்வீர்கள். விலகி சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். லாபம் கணிசமாக உயரும்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும்.

**கன்னி**

குடும்பத்தில் விட்டு கொடுத்துபோவது நல்லது. யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். உடல் நலம் பாதிக்கும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம்.

**துலாம்**

குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். தாய்வழியில் ஒத்துழைப்பு இருக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக்கொடுப்பீர்கள். வீட்டைஅழகுபடுத்துவீர்கள்.

**விருட்சிகம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள்.

**தனுசு**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். நேர்மறை சிந்தனை பெருகும். உடல் நலம் சீராகும். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும்.

**கும்பம்**

பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்திகள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். மரியாதை கூடும்.

### இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம்

# வவுனியா மாணவன் கபிலாஸ் தேசிய ரீதியில் முதலாம் இடம்






வவுனியா, நவ. 25

இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றை கண்டுபிடித்து காட்சிப்படுத்திய வவுனியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவர் தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பிடித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான ரோபோட்டிக் புத்தாக்க போட்டியில் வவுனியா விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த சிவதேவன் கபிலாஸ் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமைக்காக பாடசாலை சமூகம் அவரை கௌரவித்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ரோபோடிக் தொடர்பான புத்தாக்க போட்டியில் 17 வயது மாணவனான சி. கபிலாஸ், இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றை கண்டுபிடித்து அதனைக் காட்சிப்படுத்தியிருந்தார். இதன் ஊடாக அவருக்கு தேசிய மட்டத்தில் முதல் பரிசு கிடைத்ததோடு அவருக்கான பதக்கமும் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மாணவன் சி. கபிலாஸ் தெரிவிக்கையில், "கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குச் சீட்டை அச்சடிப்பதற்கு அதிகமான பணம் செலவு செய்யப்பட்டதாக எனது பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் இந்த செலவை குறைப்பதற்கு ஏதே னும் கண்டுபிடித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கின்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது.

இதன் ஊடாக ஓர் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றை கண்டுபிடிக்க முயற்சி செய்தேன். அதில் வெற்றியும் பெற்றேன்.

எனினும் அதற்கான உபகரணங்கள் பலவற்றை வவுனியாவில் பெற்றுக்கொள்வதற்கு முடியவில்லை. அதனால் கொழும்புக்கு சென்று அந்தப் பொருட்களை வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில் பெரும் சிரமத்துக்கு மத்தியில் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை கண்டுபிடித்து காட்சிப் படுத்தியிருந்தேன். இந்த கண்டுபிடிப்பை மேலும் விரிவுபடுத்தி இலங்கையில் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கமும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் ஒத்துழைப்பு வழங்குமாக இருந்தால் இதனை இன்னும் திறம்பட செயல்படுத்துவதற்கு என்னால் முடியும்"- என்றார். (எ)

# வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றும் அரசு இதுவல்ல

### ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, நவ. 25

வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய அரசாங்கங்கள் போல் அல்லாமல் செயல்வடிவில் தமிழ் மக்களின் பிரச்னைகளை ஜனாதிபதி அநுர நடைமுறைப்படுத்துவார் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பிரதான அலுவலகத்தை திறந்து வைத்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,"76 வருடங்களுக்கு பின்னர் ஊழலற்ற நேர்மையான ஓர் அரசாங்கத்தை அமைத்திருக்கிறீர்கள். எமது வெற்றியை உறுதிப்படுத்திய அனைத்து மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். எமது மக்களுக்கான சேவை இன்றிலிருந்து ஆரம்பமாகின்றது. அனைத்து மக்களையும் உள்வாங்கி சம வாய்ப்புகளையும் உரிமையையும் பெற்றுக்கொள்வதில் நாங்கள் முன்னிலையில் இருப்போம்.

அதேபோன்று வளமான தேசத்தையும் அழகான வாழ்க்கையும் அமைப்பதற்கு நாட்டு மக்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும். எதிர்காலத்தில் எம்மால் செய்யப்படும் அனைத்து வேலைத்திட்டங்களும் மக்கள் மயமானதாகவே இருக்கும்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முன்னின்று உழைப்போம். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

படிப்படியாக அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும். வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய அரசாங்கங்கள் போல் அல்லாது செயல்வடிவிலே எமது ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என்பதில் பூரண நம்பிக்கை இருக்கிறது. நாங்களும் அதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவோம்"- என்றார். (எ)

# மன்னார் பொது மருத்துவமனையில் மரணமான தாயின் வீட்டுக்கு சென்ற சத்தியலிங்கம் எம். பி.

### நீதியை பெற்றுத்தர குடும்பத்தினர் கோரிக்கை



மன்னார், நவ. 25

மன்னார் பொது மருத்துவமனையில் பிரசவத்துக்காக சென்ற இளம் பெண் வனஜா மற்றும் அவரது சிசுவின் மரணம் பெரும் அதிர்ச்சியையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்தத் தாயின் குடும்பத்தினரை பாராளுமன்ற உறுப்பினர், மருத்துவர் ப. சத்தியலிங்கம் நேற்று மன்னாரில் உள்ள அவர்களது இல்லத்துக்கு சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பாராளுமன்ற உறுப்பினரிடம் இவ்விடயம் தொடர்பில் தமக்கான நீதியைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியால் நிச்சயம் மீண்டெழ முடியும்

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

**ஐக்கிய மக்கள் சக்தியால் மீண்டும் எழ முடியாது என எண்ண வேண்டாம். அடுத்த தேர்தலில் நாம் நிச்சயம் எழுச்சி அடைவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத்தேர்தலில் மக்கள் திசைகாட்டிச்சின்னத்தை வெற்றியடைய செய்ய பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு 14 ஆசனத்தை பாராளுமன்றத்தில் பெற்றுத்தரும் அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளனர். அதற்காக எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. இருப்பினும் அதில் பாரிய சவால்கள் உள்ளன. எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் உள்ளது. இத்தகைய பின்னணியில் அதிலிருந்து விலகவேண்டியது அவசியமாகும். ஆனால் அதேநிலையிலேயே நாடு இன்னமும் உள்ளது. அக்கராசன உரையில் ஜனாதிபதி பல விடயங்களை குறிப்பிட்டார் ஆனால் அவற்றை யதார்த்தமாக்குவதில் தான் சவால்கள் உள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியினர் 50 வருடங்களாக தோல்வியையே தழுவினர். ஆனால்



தற்போது அவர்கள் பாரிய வெற்றியை சுவீகரித்துள்ளனர். அந்த வகையில் எடுத்து நோக்கும் போது வெற்றி தோல்வி என்பது சாதாரண விடயமாகும்.

எழுச்சி என்பது கொள்கைகள், வேலைத்திட்டங்களில் தங்கியுள்ளது. ஆகவே எம்மால் மீண்டும் எழமுடியாது என கூற முடியாது.

அடுத்த தேர்தலில் நாம் நிச்சயம் எழுச்சி அடைவோம்-என்றார்.

(அ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர் அதிரடிப்படையினரால் கைது

கொழும்பு, நவ. 25

மாவெளி வனப்பகுதியில் பெரும் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு பிரதானமாக நீர் வழங்கும் பொகவந்தலாவ மாவெளி வனப்பகுதியில் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டதாக குறித்த 9 பேரையும் நுவரெலியா மீபிலிமான பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு பெரும் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தியதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்களை கைது செய்ததோடு, மாணிக்கக்கல் அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டு பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பலாங்கொடை மற்றும் பொகவந்தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், மேலும், இவ்வாறான சுற்றிவளைப்புகள் தொடரும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வழிப்பறி கும்பல் கைது

காலி, நவ. 25

காலி, அம்பலாங்கொடை பிரதேசத்தில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டதாக கூறப்படும் கும்பலொன்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து 8 தங்கச் சங்கிலிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)



# ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்க ஜப்பான் அரசாங்கம் ஆதரவு வழங்கும்

கொழும்பு, நவ. 25

ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்கி பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய அரசின் கொள்கைக்கு ஜப்பான் அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்று அந்த நாட்டின் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜப்பானிய தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை திறம்பட தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

வீண் விரயம், ஊழல், மோசடியற்ற நாட்டை உருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய கொள்கைக்கு ஜப்பான் அரசாங்கத்தின் பாராட்டுக்களை தெரிவித்த தூதுவர் அகியோ இசோமடா, இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் சிறந்த ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார். (எ)

ருஹூணு பல்கலைக்கழக விவகாரம்

# உபவேந்தரை பதவி நீக்க புதன் வரை கால அவகாசம்

கொழும்பு , நவ 25

ருஹூணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை உடனடியாக பதவி நீக்காவிட்டால், எதிர்வரும் வியாழக்கிழமை முதல் அனைத்து பல்கலைக்கழகங்களையும் ஒன்றிணைத்துக் கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

ருஹூணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் செயல்பாடுகளுக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா தொழிற்சங்கங்கள் கடந்த 5 நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், ருஹூணு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன, தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# டுபாயிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு சிகரெட் கடத்தல்

## 25 வயதான சந்தேக நபர் விமான நிலையத்தில் கைது

கொழும்பு, நவ. 25

டுபாயில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர், விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 59 ஆயிரத்து 980 சிகரெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 25 வயதான சந்தேக நபர் கொட்டாவ பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சுகாதாரத் தொழிற்சங்கங்களுடன் அமைச்சர் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, நவ. 25

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ, அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் முதல் தடவையாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன் தினம் கலந்துரையாடினார்.

சுகாதார வல்லுநர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் பிரச்னைகள் மற்றும் சரியான சுகாதார சேவையைப் பேணுவதற்கு எடுக்கப்பட வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருத்துவ நிபுணர்களின் சங்கம், அரசாங்க பல்மருத்துவ சங்கம், அகில இலங்கை தாதியர் சங்கம், பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கம் மற்றும் அரசாங்க தாதியர் சங்கம் ஆகியன பங்கு பற்றின.

இதன்போது, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தமது தொழில் பிரச்னைகளை சுகாதார அமைச்சரிடம் முன்வைத்தனர். இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சுடன் இணைந்து தற்போதுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது மிகவும் முக்கியமானது எனவும் இதன் ஊடாக சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு முறையாக செயற்பட முடியும் எனவும் வலியுறுத்தினார்.

புதிய பிரச்னைகளை உருவாக்குவதற்கு இடமளிக்காமல், தற்போதுள்ள பிரச்னைகளை தீர்ப்பதற்கு அனைவரின் ஆதரவையும் வழங்குமாறும் அமைச்சர் விசேட கோரிக்கை விடுத்தார்.

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவை சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றுள்ளதால், சுகாதார நிபுணர்களின் தொழில்சார் கௌரவத்தை சுகாதார அமைச்சு தொடர்ந்தும் பாதுகாக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்

இந்தக் கூட்டத்தில், பிரதி சுகாதார அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நஜித் இந்திக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன, மேலதிக செயலாளர்கள், பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தேசியப் பட்டியல் தொடர்பில் எவ்வித நெருக்கடியும் இல்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

**தேசிய பட்டியல் நியமனம் தொடர்பில் எதிர்காலத்தில் அறியத் தருவோம் எனவும் அவை முறையான ஒழுங்கில் முன்னெடுக்கப்படும் எனவும் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி தொடர்பில் எவ்வித நெருக்கடியும் இல்லை உண்மையைச் சொல்வதானால், பட்டியலில் உள்ள அனைவரும் மிகவும் பொருத்தமானவர்கள்.

நாட்டை கட்டியெழுப்புவதில் இவர்கள் அனைவருக்கும் பெரும் பொறுப்பு இருக்க வேண்டும். இந்த பட்டியலில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் உள்ளனர். வீழ்ச்சி கண்டுள்ள நாட்டையும் 220 இலட்சம் மக்களையும் மீட்டெடுப்பதே எனது எண்ணப்பாடாக இருக்கின்றது.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை குறித்து நாட்டு மக்களாலே ஒரு முடிவுக்கு வரலாம் . பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமையவே உறுப்பினர்கள் அனைவரும் செயற்பட வேண்டும் .

ஐக்கிய மக்கள் சக்தி பின்பற்றும் கொள்கைகள் காணப்படுகின்றன. இந்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை நம்பும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் நேர்மறையான கருத்துக்கள் உள்ள அனைவரும் எம்மோடு இணைந்த கொள்ளலாம்-என்றார்.

# சு.கவுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்கவேண்டும்

## நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை

கொழும்பு, நவ. 25

சுதந்திரக்கட்சிக்கு கிடைக்கப்பெற வேண்டிய தேசியப்பட்டியல் ஆசனம் நிச்சயம் கிடைக்கப்பெற வேண்டும் என சுதந்திரக்கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, தெரிவித்துள்ளார்.

தேசியப்பட்டடியல் ஆசனம் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை தொடர்பில் ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியக் குழு நேற்று முன் தினம் கூடியுள்ளது.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுதந்திரக்கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா-நாம் காஸ்சிலிண்டர் சின்னத்தில் கூட்டணியாமைத்தே போட்டியிட்டோம். இத்தகைய பின்னணியில் எமக்கு கிடைக்கப்பெற வேண்டிய தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம்.

இந்த விடயத்தில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதை நாம் அறிவோம். எது எவ்வாறாக இருப்பினும் சுதந்திரக்கட்சிக்கு கிடைக்கப்பெற வேண்டிய தேசியப்பட்டியல் ஆசனம் நிச்சயம் கிடைக்கப்பெற வேண்டும்.

தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தமையை தொடர்ந்து நாம் யாருக்கு அந்த ஆசனத்தை வழங்குவது என்ற தீர்மானத்திற்கு வருவோம்.-என்றார். (அ)

# உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்!

## 2,312 பரீட்சை நிலையங்கள்

கொழும்பு, நவ. 25

நாடளாவிய ரீதியில், 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், உயர்தரப் பரீட்சை நிலையங்களில் நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இம்முறை உயர்தரப் பரீட்சையானது 2 ஆயிரத்து 312 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

பரீட்சை நடைபெறும் அனைத்து நிலையங்களிலும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு பணிப்பிற்கமைவாக, டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பரீட்சை நிலையங்களில் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார பிரிவினரால் புகைவிசுறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை இன்று ஆரம்பமாகவுள்ள பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். பரீட்சை இன்று ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை பரீட்சைக்காக தோற்றவுள்ள 3 இலட்சத்து 33 ஆயிரத்து 183 பேரில் பாடசாலை பரீட்சார்த்திகள் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 380 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 79 ஆயிரத்து 795 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரிகள் மட்டுமே கைபேசிகள் பயன்படுத்தலாம்

கொழும்பு, நவ. 25

இன்று ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் போது, பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை நிலையங்களுக்குள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விசேட செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனைக் குறிப்பிட்டார்.

பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கான தேவை உள்ளதால் மாத்திரமே அவர்களுக்கும் கைபேசி பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் கைபேசிகளை பரீட்சை பயன்படுத்த முடியும் முன்னதாக பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் கைபேசிகளை பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்தமுறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் போது, பரீட்சை மண்ட உதவி பொறுப்பதிகாரிகள் அல்லது கண்காணிப்பாளர்கள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பரீட்சை காலங்களில் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பரீட்சார்த்திகளுக்கான வசதிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன முதல் ஆறு நாட்களுக்குத் தேவையான வினாத்தாள்கள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் குதித்து மாணவி உயிர்மாய்ப்பு!

கொழும்பு, நவ. 25

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் குதித்து பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குறித்த மாணவி நேற்று முன் தினம் பிற்பகல் மற்றுமொரு நண்பியுடன் நீர்த்தேக்கத்தில் குதித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீரில் மூழ்கிய இரு மாணவிகளில் ஒருவர் உயிர் பிழைத்துள்ளதுடன், காணாமல்போன மற்றைய மாணவியின் சடலம் நேற்று முன் தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

தெல்தெனிய பகுதியில் வசிக்கும் 17 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

உயிருடன் மீட்கப்பட்ட மாணவி தற்போது அதிர்ச்சிக்குள்ளான தெல்தெனிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மின்சார சபை பணியாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு விரைவில்!

கொழும்பு, நவ. 25

இலங்கை மின்சார சபை லாபமீட்டும் நிறுவனமாக மாறியுள்ள நிலையில், அதன் பணியாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால், இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊழியர்களுக்குக் கடந்த 2 வருடங்களாக முந்தைய நிர்வாகம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கியிருக்கவில்லை.

இலங்கை மின்சார சபை நட்டம் அடையவில்லை என்றும் அது இலாபத்தில் இயங்கும் நிறுவனம் எனவும் ரஞ்சன் ஜயலால் இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலாலிடம் இது தொடர்பாக வினவியபோது, உரிய ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்கும் போது, அனைத்து ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஒரே தொகையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (அ)

# முதல் 20 நாட்களில் மட்டும் 120,961 சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, நவ. 25

இந்த மாதத்தின் முதல் இருபது நாட்களில் 120,961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதுடன், அந்த எண்ணிக்கை 26,717 ஆகும்.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 17 இலட்சத்து 41 ஆயிரத்து 676 ஆகும்.

இந்தநிலையில், கடந்த வருடம் இலங்கை வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 14 இலட்சத்து 87 ஆயிரத்து 303 என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# முட்டை விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, நவ. 25

சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த நாட்களில் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது சந்தையில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான முட்டை 38 ரூபாய்க்கும், சாதாரண முட்டை 40 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண திருத்தம் இந்த ஆண்டு இல்லை!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

**இந்த ஆண்டு மின் கட்டண திருத்தம் இனி இருக்காது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இலங்கை மின்சார சபையினால் மின்சார கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டமையே இதற்கு காரணம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் கூறியுள்ளார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் கடந்த செப்டெம்பர் மாத இறுதியில் இலங்கை மின்சார சபையினால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

எவ்வாறெனினும் தாங்கள் முன்வைத்துள்ள மின்சாரக் கட்டணக் குறைப்பு போதாது என்பதால் மீண்டும் முன்மொழிவுகளை மீள்திருத்தம் செய்து சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்தது.

நவம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்திருந்த போதிலும், மின்சார சபை அன்றைய தினம் முன்மொழிவை சமர்ப்பிக்கவில்லை.

நவம்பர் 22 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குமாறு மின்சார சபை கோரியது.

எனினும், அன்றைய தினமும் இலங்கை மின்சார சபை முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவில்லை, அதற்கு பதிலாக மேலும் இரண்டு வார கால அவகாசம் வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்தது.

இதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை இலங்கை மின்சார சபைக்கு கால அவகாசம் வழங்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

எவ்வாறெனினும், குறித்த திகதியில் இலங்கை மின்சார சபை முன்மொழிவுகளை சமர்ப்பித்த போதிலும், முன் மொழிவுகளை ஆராய்ந்து மின்சார கட்டணங்களை திருத்துவதற்கு 06 மற்றும் 8 வாரங்களுக்கு இடைப்பட்ட கால அவகாசம் தேவைப்படும்.

இந்த நிலையில், மின் கட்டண திருத்தம் அடுத்த வருடம் வரை ஒத்திவைக்கப்படுவதாக ஜெயநாத் ஹேரத் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை இலாபகரமான நிலையை அடைந்துள்ளதால், ஊழியர் மேலதிக கொடுப்பனவை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார சபையின் தலைவரிடம் இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறி சுமார் இரண்டு வருடங்களாக இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என இலங்கை மின்சார ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# உத்தியோகபூர்வக் குடியிருப்புக்களை கையளிக்காத 30 முன்னாள் எம்.பிக்கள்!

கொழும்பு, நவ. 25

சுமார் 30 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உத்தியோகப்பூர்வ குடியிருப்புகளை இன்னும் ஒப்படைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய எம்.பி.க்களுக்கு குடியிருப்புகள் வழங்க வேண்டியுள்ள தேவையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை வீடுகளை காலி செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் ஏழு எம்.பி.க்கள் தங்களுடைய குடியிருப்புகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, முன்னாள் எம்.பி.க்கள் குறித்த குடியிருப்புகளை காலி செய்யாவிடின் அந்த குடியிருப்புகளுக்கான நீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்படும் என பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர அண்மையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாசஸ் தலங்களை வழங்கும் வகையில் தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

மாதிவெல வீட்டுத் தொகுதி புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 35 இற்கும் மேற்பட்டோர் மாதிவெல வீட்டுத் தொகுதியிலிருந்து உத்தியோகபூர்வ வீடமைப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து 40 கிலோ மீற்றர்களுக்குள் வீடு இல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் வீடுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலும், அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைய இந்த வீடுகள் வழங்கப்படும் என பாராளுமன்ற சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் 110 வீடுகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை மாற்றமில்லை

கொழும்பு, நவ. 25

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் மாற்றம் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

தலைமைப்பதவி மாற்றம் தொடர்பில் கட்சிக்குள் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை எனவும், எதிரணியை சீர்குலைக்கும் வகையில் இந்த தகவல் பரப்பட்டுவருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் இருந்து சஜித் பிரேமதாசவை நீக்கிவிட்டு, அப்பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# ஜனவரி மாதம் முதல் கட்சியில் மாற்றங்கள்

## ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்ததைப்போல் எதிர வரும் ஜனவரி முதல் கட்சியில் மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ராகல பகுதியில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்கள் மற்றும் மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இம் மாற்றங்களினூடாக தொடர்ந்து செயற்படத் தயார் நிலையில் இருக்கிறோம், இதுவே காலத்தின் தேவைப்பாடு.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச்செயலாளர் என்ற பதவி அங்கீகாரமானது, கட்சி ஸ்தாபனம் மற்றும் சின்னத்தைப் பாதுகாக்க வேண்டும் அதேபோல் மலையகத்தையும் பாதுகாக்க வேண்டும்.

அதே நேரம் பாராளுமன்ற ஆசனத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாரிய நோக்கத்துடனே நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் யானை சின்னத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

மேலும், கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் தனது மாவட்டத்தில் 2 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.

நாமும் 2 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டோம். அது தற்போது ஒரு ஆசனம் ஆகியது, அதற்குக் காரணம் எமது ஆளுமை இன்மையல்ல, சிலரின் சூழ்ச்சியாகும்.

இதை நாம் அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும், இதனை நினைத்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

அத்தோடு 6 உறுப்பினர்களை வென்றெடுத்த மலையகக் கட்சி தற்போது 2 உறுப்பினர்களைத் தன்வசமாக்கி நாம் உண்டு நம் வேலை உண்டு என்று இருக்கிறது.

அதேபோல் சஜித் பிரேமதாச 60 உறுப்பினர்கள் வைத்திருந்தவர் தற்போது 35 ஆசனங்களை வென்றெடுத்து கவலை இன்றி எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்தில் அமர்ந்து இருக்கிறார்.

மகிந்த ராஜபக்ச 153 ஆசனங்களை வைத்திருந்தவர் இன்று 3 ஆசனத்தை வைத்திருக்கிறார்.

இவர்களே இவ்வாறு செயற்படும் போது நாம் நடந்தவற்றை நினைத்துக் கவலை கொள்ளாமல் எதிர்காலத்தினை நோக்கிய பயணத்தை வெற்றி கொள்வோம்.

இறந்து போன யானைக்கு 53 நாட்களில் உயிர் கொடுத்து இருக்கிறோம். இதை நினைத்து நாம் பெருமை கொள்ள வேண்டும்.

மலையகத்தை மாற்றுவோம் என ஜனாதிபதி கூறியிருக்கின்றார், எனவே நாம் அந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.

# புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உரிமை கோரும் நிமல் சிறிபால டி சில்வா அணி!

கொழும்பு, நவ. 25

சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணிக்கு எஞ்சியிருந்த தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்கு சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணியினர் உரிமை கோரியுள்ளனர்.

நேற்று முன்தினம் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைது!

கொழும்பு, நவ. 25

வெலிகந்தை - மட்டக்களப்பு வீதியின் நாமல் பொக்குண பகுதியில் தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இராணுவ உறுப்பினர்கள் இருவரும் இராணுவத்திலிருந்து விலகிய ஒருவரும் அடங்குகின்றனர்.

சந்தேகபர்களிடமிருந்து 2 இராணுவ சீருடைகளும் அகழ்விற்காக பயன்படுத்திய பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்த ஆண்டில் இதுவரை 497 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, நவ. 25

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிய 497 இந்திய மீனவர்கள் கைதாகியுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் இந்திய மீனவர்களின் 66 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான சுற்றிவளைப்பு செயற்பாடுகளை அதிகரித்துள்ளதாகக் கடற்படை அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

## அம்பாறை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





கல்முனை, நவ. 25

**வங்காள விரிகுடாவில் உருவான காற்று சுழற்சி காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழையால் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.**

பலத்த மழையுடனான கால நிலை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளன. தாழ்நிலப் பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். கடும் மழையுடன் பலத்த காற்றும் சில பிரதேசங்களில் வீசி வருவதால், இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று முற்பகல் 11 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் இம்மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 178.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் தீகவாபி பகுதியில் 150.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், இலுக்குச்சேனைப் பகுதியில் 114.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், எக்கல்ஓயா பிரதேசத்தில் 118.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறை நகரப் பகுதியில் 91.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இங்கினியாகலயில் 86.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பிரதேசத்தில் 82.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக விவசாயச் செய்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இம் மாவட்டத்தின் நெற்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கை போன்றவற்றுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இம்மாவட்த்தின் ஆற்றுப் பகுதிகள், கால்வாய்கள் மற்றும் நீர் வடிந்து செல்லும் பகுதிகளின் தடைகளை அப்புறப்படுத்தும் வேலைத் திட்டங்களை நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் கடற்பரப்பில் பலத்த காற்றுடனான மழை பெய்து வருவதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளதுடன் நன்நீர் மீன் பிடித் தொழிலுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மீன்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் மாலை வேளைகளில் வீசுகின்ற பலத்த காற்று காரணமாக சில பிரதேசங்களில் கடல் அலை சுமார் பதினைந்து அடிக்கும் மேல் உயர்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

(எ)



# சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த அம்பாறையில் இளைஞர் மாநாடு

சம்மாந்துறை, நவ. 25

வன்முறை சிந்தனையை இளைஞர்கள் மத்தியில் இருந்து இல்லாதொழித்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வருட செயல்திட்டத்தின் மாவட்ட மட்ட மாநாடு சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ரீதியில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள இந்தச் செயல்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கப்சோ நிறுவனத்தின் பணிப்பாளர் காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது "வன்முறைகளை தவிர்க்கும் இளைஞர்கள்" எனும் தொனிப்பொருளிலான வீதி நாடகத்தை ஒரு வருட காலமாக ஆற்றுகைப்படுத்தி வந்த 300இற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கும், கண்காட்சி கூடாரங்கள் என்பனவற்றின் மூலம் சிறப்பித்து பயிற்சி நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகராஜன், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, அம்பாறை, தமன மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலக இளைஞர் மன்ற செயல்பாட்டாளர்கள் உட்பட ஹெல்விடாஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(எ)

# மருதமுனை மருத்துவமனை அபிவிருத்தி குழு கூட்டம்

மருதமுனை, நவ. 25

மருதமுனை மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீன் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோரின் பங்கேற்புடன் சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இதில் மருதமுனை பிரதேச மருத்துவமனையின் பிரதேச வைத்திய அதிகாரியும் அதன் தலைவருமான ஐ. எல். எம். மிஹ்லாரும், சங்கத்தின் செயலாளர், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மருத்துவமனைக்கு தேவையான சில உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் மருத்துவமனை முகம் கொடுக்கின்ற சவால்கள், பிரச்னைகளை தீர்த்து வைத்து சுமுகமான முறையில் அதனை கொண்டு செல்வதற்கும் குறுங்கால - நீண்டகால அபிவிருத்தி தொடர்பிலும் இக்கூட்டத்தின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, மருத்துவமனைக்கு தேவையான சில உபகரணங்களும் வழங்கப்பட்டன.

(எ)

# திகாமடுல்ல தேர்தல் முடிவை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## தேர்தல்கள் ஆணையாளரிடம் அதாவுல்லா கோரிக்கை

கல்முனை, நவ. 25

பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்துக்கு சென்று, பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை ஆணையாளரிடம் கையளித்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் நிர்வாகிகள், "திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை மீள பரிசீலனை செய்ய வேண்டும் என்பதையும் கடந்த



தேர்தல் காலத்தில் அதாவுல்லாவை இலக்கு வைத்து பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இம் மனுவில் விசேடமாக உள்ளடக்கப்பட்டு இருந்தது"என்று தெரிவித்தனர்.

மேலும், நியாயத்துக்காக எப்போதும் குரல் கொடுக்கும் தேசிய காங்கிரஸ் இது தொடர்பான விரிவான விளக்கங்களை மிக விரைவில் மக்கள் மன்றில் சமர்ப்பித்து அதன் அரசியல் போராட்டத்தை தொடரும் என்றும் கூறினர். இந்தச் சந்திப்பில் தேசிய காங்கிரஸின் பிரதித் தலைவர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே. எம். வஸீர், சட்டத்தரணி மர்சூம் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)








தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று சிறி இராமகிருஷ்ண கல்லூரி தேசிய பாடசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் ஜே. ஆர். டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 3ஆம் உலகப்போர் தொடங்கிவிட்டது!

## உக்ரைன் முன்னாள் இராணுவத் தளபதி

கீவ், நவ. 25

**ரஷ்யா - உக்ரைன் இடையே 1000 நாட்களைக் கடந்து உக்கிர போர் இடம்பெற்று வரும் நிலையில் மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டதாக உக்ரைன் முன்னாள் இராணுவத் தளபதியும் பிரிட்டனுக்கான தற்போதைய உக்ரைன் தூதருமான வலேரி ஜலுஷ்னி தெரிவித்துள்ளார்.**



உக்ரைன்ஸ்கா பிராவ்டாவின் விருது வழங்கும் விழாவில் ஜலுஷ்னி கூறுகையில், "ரஷ்யா - உக்ரைன் இடையிலான மோதலில் ரஷ்யாவின் நட்பு நாடுகள் நேரடியாக போரில் ஈடுபட்டிருப்பது மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது என்று அர்த்தம்.

இதனால் 2024ஆம் ஆண்டு மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது. 10,000 வட கொரிய ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களை குர்ஸ்க் பகுதியில் நிலை நிறுத்தியிருப்பதாகவும், உக்ரைனுக்கு எதிராக ஈரானின் ட்ரோன்கள் மற்றும் பிற அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

உக்ரைன் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் போரில் தாக்குப்பிடித்து வருகிறது. ஆனால், போரில் தனியாக வெல்லுமா என்று உறுதியாக கூறமுடியாது. வடகொரியாவைச் சேர்ந்த படையினர் உக்ரைனுக்கு முன்னாள் உள்ளனர். உக்ரைனில், ஈரானிய படையினர் பொதுமக்களை எந்தவித பாரபட்சம் இல்லாமல் கொல்கிறார்கள். உக்ரைனின் ஆதரவாளர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

ஆனால் உக்ரைன் போரை நிறுத்துவதுகூட இன்னும் சாத்தியம்தான். சில காரணங்களால், எங்கள் ஆதரவாளர்கள் இதை புரிந்து கொள்ள விரும்பவில்லை. உக்ரைனுக்கு ஏற்கனவே பல எதிரிகள் உள்ளனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்"- என்றார். (எ)

# அதானி விவகாரத்தை கையாள இந்திய - அமெரிக்க உறவு உதவும்

## வெள்ளை மாளிகை நம்பிக்கை

வாஷிங்டன், நவ. 25

அதானி மீதான ஊழல் குற்றச்சாட்டு நெருக்கடியை கையாள இந்தியா - அமெரிக்கா இடையேயான வலுவான உறவு உதவும் என்று வெள்ளை மாளிகை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜீன் பியர் கூறுகையில், "அதானி குழுமம் மீதான குற்றச்சாட்டுகளை நாங்கள் அறிவோம். இந்த விவகாரத்தை முறைப்படி பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம், நீதித்துறை நேரடி மேற்பார்வையில் விசாரிக்கும். நான் இத்தருணத்தில் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையேயான உறவு வலுவான அடித்தளம் கொண்டது. மேலும், இரு நாட்டு மக்களுக்கும் இடையே நல்ல உறவு உள்ளது. இவை இவ்விவகாரத்தை வழிநடத்திச் செல்ல உதவும் என நம்புகிறேன்" என்றார். (எ)

# அதானி குழுமத்துடன் ஒப்பந்தங்கள் இரத்து

## கென்யா ஜனாதிபதி அறிவிப்பு

கெய்ரோ, நவ. 25

அமெரிக்க நீதிமன்றத்தின் குற்றச்சாட்டை தொடர்ந்து, அதானி குழுமத்துடனான 736 மில்லியன் டொலர் மதிப்பிலான ஒப்பந்தங்களை இரத்து செய்வதாக கென்யா அறிவித்துள்ளது. நம்பகமான ஆதாரங்களின் அடிப்படையில், உட்கட்டமைப்புக்கான ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்படுவதாக கென்யா ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்துள்ளார். (எ)

# இந்திய அதிகாரிகளுக்கு ரூ. 2,100 கோடி இலஞ்சம்

## அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடியாணை

நியூயோர்க், நவ. 25

தமிழகம், ஆந்திரா, ஒடிசா, ஜம்மு - காஷ்மீர், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் சூரிய ஒளி மின்சார விநியோக ஒப்பந்தங்களை பெறுவதற்காக இந்திய அதிகாரிகளுக்கு அதானி குழுமம் 2,100 கோடி ரூபாய் இலஞ்சம் கொடுத்ததாக தொடரப்பட்ட வழக்கில் கௌதம் அதானிக்கு எதிராக அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.



அதானி குழும நிறுவனங்களின் தலைவர் கௌதம் அதானி, உலகப் பணக்காரர் பட்டியலில் 17ஆவது இடத்திலும், இந்திய அளவில் 2ஆவது இடத்திலும் உள்ளார். இந்த நிலையில், கௌதம் அதானி மற்றும் அவரது உறவினர் சாகர் அதானி, முன்னாள் தலைமை அதிகாரி வினித் ஜெயின் உள்ளிட்ட 7 பேர் மீது இலஞ்சம் மற்றும் கடன் பத்திர மோசடி தொடர்பான தனித்தனி வழக்குகளில் அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ)

# நிஜ்ஜார் கொலை வழக்கில் மோடிக்கு தொடர்பு இல்லை

## கனடா அரசு விளக்கம்

ஒட்டோவா, நவ. 25

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலுக்கு தொடர்பில்லை என்று கனடா அரசு விளக்கமளித்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம், சர்ரே நகரில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலை வழக்கில் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதாக கனடா அரசு குற்றஞ்சாட்டியது. இதனால், இருநாடுகளும் பரஸ்பரம் தூதரக அதிகாரிகளை வெளியேற்றின.

இந்தச் சூழலில் கனடாவின் முன்னணி நாளிதழான குளோப் அண்ட் மெயிலில் ஒரு செய்தி வெளியானது. பெயர் குறிப்பிடப்படாத கனடா பாதுகாப்பு அதிகாரியை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்ட அந்த செய்தியில், "ஹர்தீப் சிங் நிஜ்ஜாரை கொலை செய்யும் சதித் திட்டம் குறித்து இந்தியப் பிரதமர் மோடி, அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருக்கு முன் கூட்டியே தெரியும்"என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நதாலி ஜி ட்ரூயின் அறிக்கை வெளியிட்டார். அதில், கனடாவில் நிகழ்த்தப்பட்ட கடுமையான குற்றச் செயல்களில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்கு தொடர்பு இருக்கிறது என்று கனடா அரசு ஒரு போதும் கூறவில்லை. இதுதொடர்பாக ஊடகத்தில் வெளியான செய்தி ஊகமானது, தவறானது - என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# பாகிஸ்தானில் பதற்றம்

இஸ்லாமாபாத், நவ. 25

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானை விடுதலை செய்ய கோரி அவரது ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு முழுவதும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லாகூர், பெஷாவர் ஆகிய நகரங்களை தலைநகர் இஸ்லாமாபாத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதன் மூலம் தலைநகருக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப் [illegible] (எ)

# சீனாவுக்கு வீசா இல்லாமல் பயணம் 9 நாடுகளுக்கு சலுகை அறிவிப்பு

பீஜிங், நவ. 25

சீனாவுக்கு வீசா இல்லாமல் பயணம் செய்ய முடியும் என்று 9 நாடுகளுக்கு சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் சுற்றுலாவை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொரோனா பெருந்தொற்று காரணமாக முடங்கி கிடந்த சுற்றுலாத் துறை தற்போது புத்துயிர் பெற்றுள்ளது.

இதன்படி பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் 9 நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு வீசா தேவையில்லை என்று சீனா அறிவித்துள்ளது. அந்தவகையில் ஜப்பான், பல்கேரியா, ருமேனியா, மால்டா, குரோஷியா, மொண்டினீக்ரோ, வடக்கு மெசிடோனியா, எஸ்டோனியா, லாட்வியா ஆகிய நாடுகளுக்கு இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளதாக சீனா வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது

## அதானி குழுமம் மறுப்பு

புதுடில்லி, நவ. 25

அமெரிக்க நீதித்துறை முன்வைத்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று அதானி குழும செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "சூரிய சக்தி ஒப்பந்தங்களை பெற இலஞ்சம் கொடுத்ததாக அமெரிக்க நீதித்துறை, பங்குச் சந்தை கூறும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. இதை முற்றிலுமாக மறுக்கிறோம். குற்றம் நிரூபிக்கப்படும் வரை, பிரதிவாதிகள் நிரபராதிகளாகவே கருதப்படுவார்கள். வெளிப்படைத் தன்மை, தரமான நிர்வாகம், சட்டவிதிகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்பதில் அதானி குழுமம் எப்போதும் உறுதியுடன் செயல்படுகிறது. நாங்கள் சட்டத்தை மதித்து நடப்பவர்கள். இப்பிரச்னையை சட்டரீதியாக எதிர்கொள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்"- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்கள் குவிப்பு இமாலய இலக்கை நோக்கி இந்தியா



பெர்த், நவ. 25

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங் ஸில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வருகிறது. அந்த அணி சார்பில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்கள் குவித்தார்.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ண (2024 - 2025) தொடரின் முதல் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 41 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 104 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஸ்டார்க் 26 ஓட்டங்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய பும்ரா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனையடுத்து 46 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 172 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஜெய்ஸ்வால் 90 ஓட்டங்களும் , கே. எல். ராகுல் 62 ஓட்டங்களும் எடுத்து களத்தில் இருந்தனர். நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்தியா தரப்பில் ராகுல் 77 ஓட்டங்கள், ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்கள், படிக்கல் 25 , ரிஷப் பண்ட் 01 மற்றும் ஜூரெல் 01 ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தனர். விராட் கோலி 52 ஓட்டங்களுடனும் வாஷிங்டன் சுந்தர் 18 ஓட்டங்களுடனும் விளையாடி வருகின்றனர். இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 384 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்துள்ளது. முதல் இன்னிங்ஸ் முன்னிலையுடன் இந்தியா 430 ஓட்டங்கள் பெற்றுள்ளது. இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு இமாலய இலக்கை இந்தியா நிர்ணயிக்க வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் இந்த போட்டியில் ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் சச்சினின் மாபெரும் சாதனையை சமன் செய்துள்ளார். அதாவது, 23 வயதை எட்டுவதற்குள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக முறை 150 ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்ற சச்சினின் சாதனையை (4 முறை) ஜெய்ஸ்வால் சமன் செய்துள்ளார்.

இந்த பட்டியலில் அவுஸ்திரேலியாவின் டான் பிராட்மன் (8 முறை) முதல் இடத்தில் உள்ளார். 2ஆவது இடத்தில் பாகிஸ்தானின் ஜாவேத் மியான்டத், தென்னாப்பிரிக்காவின் கிரேம் ஸ்மித், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆகியோர் (தலா 4 முறை) உள்ளனர்.

(எ)



# அரைச்சதம் அடித்து ஆஸியில் சாதனை

பெர்த், நவ. 25

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் ராகுல் - ஜெய்ஸ்வால் இருவரும் அரைச்சதம் அடித்துள்ளனர்.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில், அவுஸ்திரேலிய மண்ணில் 38 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் இரு தொடக்க வீரர்கள் அரைச்சதம் அடித்துள்ளனர். இதற்கு முன்னர் 1986ஆம் ஆண்டு சுனில் கவாஸ்கர் மற்றும் சிறீகாந்த் இந்த சாதனையை படைத்துள்ளனர். தற்போது கே. எல். ராகுல் மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இணைந்து இந்தச் சாதனை படைத்துள்ளனர்.

ஒட்டு மொத்தத்தில் இந்த சாதனையை படைத்த 4ஆவது இந்திய இணை என்ற சாதனையையும் இவர்கள் படைத்துள்ளனர். (எ)




# ஒருநாள் கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியா அறிவிப்பு

மெல்பேர்ண், நவ. 25

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் முதல் இரு போட்டிகள் பிரிஸ்பேனிலும், 3ஆவது போட்டி பெர்த்திலும் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்தியா மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான தொடர்களுக்கான அவுஸ்திரேலிய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அலிசா ஹீலி காயமடைந்துள்ளதால் இந்தியாவுக்கு எதிரான தொடரில் இடம்பெறவில்லை. அவரது உடல்நிலையை பொறுத்து நியூசிலாந்து தொடரில் இடம்பெறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய மகளிர் அணி விவரம் வருமாறு, டார்சி ப்ரவுன், ஆஷ்லே கார்ட்னெர், கிம் கார்த், அலனா கிங், போப் லிட்ச்பீல்ட், தஹ்லியா மெக்ராத் (துணை தலைவி), சோபி மோலினக்ஸ், பெத் மூனி, எல்லிஸ் பெரி, மேகன் ஷட், அன்னாபெல் சதர்லெண்ட், ஜார்ஜியா வோல் (இந்தியாவுக்கு எதிரான தொடர் மட்டும்), அலிசா ஹீலி ( நியூசிலாந்து தொடருக்கு மட்டும், உடல்தகுதியை பொறுத்து) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புதிய பயிற்சியாளர் முர்ரே ஜோகோவிச்சின் அறிவிப்பு

பெல்கிரேட், நவ. 25

இங்கிலாந்தின் ஆண்டி முர்ரேவை தனது புதிய பயிற்சியாளராக நோவக் ஜோகோவிச் அறிவித்துள்ளார்.

நான்கு வகை கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், அவுஸ்திரேலிய ஓபன் தொடருக்காக செர்பிய வீரரும், உலகளவில் புள்ளி பட்டியலில் இரண்டாம் இடத்திலுள்ள வீரருமான நோவக் ஜோகோவிச், முன்னாள் வீரரான இங்கிலாந்தின் ஆண்டி முர்ரேவை தனது புதிய பயிற்சியாளராக அறிவித்துள்ளார்.

அனுபவம் வாய்ந்த ரென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே சமீபத்தில் நடந்து முடிந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு ஓய்வு பெற்றார். ஜனவரி மாதம் மெல்பேர்ணில் நடைபெறும் அவுஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிச்சுடன் இணைந்து அவர் பணியாற்றவுள்ளார்.

இது தொடர்பில் ஜோகோவிச் கூறுகையில், "எனது மிகப்பெரிய போட்டியாளர்களில் ஒருவரை, வலையின் அதே பக்கத்தில், இந்த முறை எனது பயிற்சியாளராக இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்"- என தெரிவித்தார். (எ)



# பங்களாதேஷுடனான டெஸ்ட் மே. இ. தீவுகள் அணி ஆதிக்கம்




ஆண்டிகுவா, நவ. 25

பங்களாதேஷுடனான டெஸ்ட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

பங்களாதேஷ் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள், 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் ஆண்டிகுவாவில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய

மேற்கு இந்திய தீவுகள் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 250 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக மைகி லூயிஸ் 97 ஓட்டங்களும், அதேன்சி 90 ஓட்டங்களும் எடுத்தனர். பங்களாதேஷ் தரப்பில் தஷ்கின் அஹமது அதிகபட்சமாக 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 2ஆவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 450 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஆட்டத்தை இடை நிறுத்தியது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஜஸ்டின் கிரீவ்ஸ் 115 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் தரப்பில் ஹசன் மஹ்மூத் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 40 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் இதற்கு கீழ் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுததப்பட்டுள்ளது.

இதேவேளை ஒமந்தை, பாலமோட்டையில் அமைந்துள்ள மடத்து விளாங்குளம் அணைக்கட்டில் உடைப்பெடுத்தமையால் இக்குளத்தின் கீழ் உள்ள 82.84 ஏக்கர் நிலம் நீரால் சூழப்பட்டுள்ளதுடன், இப்பகுதியின் ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

மேலும் இதனை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கையினை கமக்கார அமைப்பு மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

## மாகாண...

தீர்ப்பினை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். உள்சூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்புமனுக்களை கோரி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஆண்டு முதல் காலாண்டில் நடத்த உத்தேசித்துள்ளோம். அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களினால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறந்ததாக அமையும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் சகல அரசியல் கட்சிகளுடன் எதிர்வரும் காலங்களில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். பொது கொள்கையின் அடிப்படையில் நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது கட்டாயமாகும்-என்றார். (அ)

## இராமேஸ்வரம்...

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து குறித்த பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான இடவசதிகள் தொடர்பில் தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் தலைமையிலான அதிகாரிகள் நேற்று முன் தினம் ஆராய்ந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அந்த நாட்டு ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார், ராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடல் வளம், பாதுகாப்பு மற்றும் கடற்றொழில் என்பவற்றுக்கு ஏற்ற வகையில் கடல் போக்குவரத்து வழித்தடம் அமையும். முதற் கட்டமாக 100 முதல் 150 பயணிகள் பயணிக்கக்கூடிய வகையிலான கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர், பாம்பன் குந்துகால், அக்னி தீர்த்தம், வில்லூண்டி தீர்த்தம், தனுஷ்கோடி குருசடை தீவு உள்ளிட்ட சுற்றுலா தளங்களைப் படகில் பார்வையிடும் வகையில் கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுவதாகத் தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழகத்தின் நாகபட்டினத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையான பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளுடன் பயணிப்பதா?

## ரெலோ அமைப்பு கேள்வி

மன்னார், நவ. 25

மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்து கொண்டு நாங்கள் தொடர்ந்தும் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? என்பது குறித்து கட்சியின் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியுள்ளது என மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ரெலோ கட்சிக்காக பல்வேறு வகையிலும் உதவி புரிந்த கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் நேற்று மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட கட்சியினர் பங்கேற்றனர். (அ)

## இனப்பிரச்னைக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கை விளக்க உரையில், இனவாதத்தால் இரத்த ஆறு ஓடிய வரலாறு கொண்ட இந்த நாட்டில், மீண்டும் அந்த நிலைக்கு இடமளிக்கப்போவதில்லை என தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த கூற்றை வரவேற்கிறேன்.

நாட்டின் அபிவிருத்திக்கு தேசியப் பிச்னைக்கு தீர்வு காண்பது அவசியமாகும். மக்கள் விடுதலை முன்னணி 1980 காலப்பகுதியில் முன்னெடுத்து வந்த புரட்சியினால் நாட்டில் இரத்த ஆறு ஓடியது.

இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் அன்று கடைப்பிடித்திருந்தால், நாட்டில் இரத்த ஆறு ஓடி இருக்காது. வடக்கில் பிரிவினைவாத யுத்தம் ஏற்பட்டிருக்காது.

என்றாலும் அவர்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ள நிலையில் 35 வருடங்களுக்கு பின்னராவது இந்த உண்மை அவர்களுக்கு புரிந்திருக்கிறது. அதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் வடக்குக்கு சென்று போராடி இருக்கிறோம். அதேபோன்று முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம்.

தேசியப்பிரச்னைக்கு தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையிலே நாங்கள் இருகிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அதனால் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி, தேசியப்பிரச்னைக்கு தீர்வு காண அரசாங்கம் முன்னெடுக்கும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோம்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். நாங்கள் ஒருபோதும் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை.

நான் மாத்திரமல்ல, எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க ஒருபோதும் அரசியல் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை.

ரணில் விக்ரமசிங்க பிரபல்ய அரசியல் செய்யவில்லை. அவர் எப்போதும் அறிவுபூர்வமான தீர்மானங்களே எடுத்துவந்தார். அதனால் அநுகுமார திஸாநாயக்க வும் பிரபல்ய அரசியல் செய்வதை விடுத்து, அறிவு பூர்வமான தீர்மானங் களை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த தேர்தலில் வடக்கு மக்களின் மனதை வெற்றிகொள்ள தேசிய மக்கள் சக்திக்கு முடியுமாகி இருக்கிறது. இது வரலாற்று வெற்றியாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது இனவாத, மதவாதத்தை நிராகரிப்பதற்கு வடக்கு மக்களின் ஆதரவும் காரணமாக இருக்கலாம்.

அதனால் தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து, அதனை நிறைவேற்றும் வகையில் அரசாங்கத்தின் பயணம் இருக்க வேண்டும் - என்றார். (அ)

## இந்திய...

குறித்த முறைப்பாட்டை அனலைதீவு மீனவர்கள் சார்பில், அனலைதீவு கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோ, வட மாகாண கடற் றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர் மேற்கோண்டனர். (அ)

## வடக்கு...

வரையிலான பலத்த மழை பெய்யுமென திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் சிவப்பு எச்சரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

மன்னார் முதல் காங்கேசன்துறை, திருகொணமலை, மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பிராந்தியத்தில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்...

செயற்பாடுகளை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் தருணத்தில் அவர்கள் ஏலவே மைத்திரி - ரணில், கூட்டாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த இடைக்கால அறிக்கையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இல்லை. அது ஒற்றையாட்சியை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள ஒன்றாகும். ஆகவே குறித்த இடைக்கால அறிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவதன் காரணமாக அவர்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் செல்ல முடியும். ஆனால் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதற்காக, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுக்கான வரைவினை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

குறித்த வரைவு தயாரிக்கப்பட்ட போது சுமந்திரன் தவிர ஏனைய கட்சிகள் அனைத்துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக தொடர்ச்சியாக அவர்களின் பங்கேற்பு முழுமை பெறும் வரையில் நீடித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், கொள்கை அளவில் அனைவரும் தமிழ் மக்கள் பேரவையின் வரைவினை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அதனை மையப்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருத்தமானதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும் ஏனையவர்கள் அதில் பங்கேற்பதற்குமான பகிரங்க அறிவிப்பை நாம் விடுக்கின்றோம் - என்றார். (அ)

## இந்தியாவை...

வெளிப்படையாக கூறும்போது, அதனை ஏற்காமல் இல்லை. நீங்கள் சீனாவுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக கருதினால், அவ்வாறு எதுவும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

அயல் நாடு என்ற வகையில் இந்தியாவை நேசிக்கின்றோம். மறுபுறம் உலகத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடாக சீனா உள்ளது. வறுமையை குறைத்துள்ள நாடாகவும் உள்ளது.

எனவே நட்பு நாடு என்ற வகையில் சீனா மீது எமக்கு அன்புள்ளது. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அனைத்து தொழில்துறைகளிலும் முன்னேற்றம் கண்ட நாடாக உள்ளது. எனவே, யாருடைய தொழில்துறைகளையும் எம்மால் நிராகரிக்க முடியாது.

எனவே, அனைத்து தரப்புகளையும் நாட்டுக்கு பயனுள்ளதாக உள்வாங்கும் பக்குவமுள்ள ஆட்சியாகவே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் உள்ளது.

அந்த வகையில், சீனாவை ஆதரிப்பதும் ஆதரிக்காமல் விடுவதும் எமது நிலைப்பாட்டை பொறுத்ததாகும். இருப்பினும் சீனா குறித்த பிரச்னைகள் தொடர்பில் எமது அரசாங்கம் நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது. வெகுவிரைவில் தெளிவான விளக்கத்தை அறிவிக்கவுள்ளோம் - என்றார். (அ)

## போலி...

மஹரக பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் களத்தில் தேர்தல் வெற்றிக்காக எவர் வேண்டுமானாலும் எதனையும் குறிப்பிடலாம் என்ற நிலைமை காணப்படுகிறது.வரையறையற்ற வகையில் சேறு பூசல்கள் இடம்பெறுகின்றன. தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை அனைவரும் மறந்து விடுகின்றனர்.

கடந்த காலங்களில் ராஜபக்ஷர்களிடம் 18 லம்போகினி வாகனங்கள் இருப்பதாகவும், உகண்டா நாட்டில் நிதியை பதுக்கி வைத்திருப்பதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் ராஜபக்ஷர்கள் உகண்டாவில் நிதியை பதுக்கி வைத்திருப்பதாக குறிப்பிட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பின்னர் அந்த குற்றச்சாட்டுக்கள் பொய் என்று குறிப்பிட்டார்.

குறுகிய அரசியல் வெற்றிக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் மீது பல போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.இவ்வாறான குற்றச்சாட்டுக்களினால் மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு ஆற்றிய சேவை மறக்கடிக்கப்பட்டு, அவப்பெயர் மாத்திரமே மிகுதியானது.

அரசியல் களத்தில் தேர்தல் வெற்றிக்காக முன்வைக்கப்படும் போலியான குற்றச்சாட்டுக்களுக்கு சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் பலமான சட்டமியற் றலுக்கு தனிநபர் பிரேரணை ஒன்றை எதிர்பார்த்துள்ளேன். ராஜபக்ஷர்கள் மீதான போலியான குற்றச்சாட்டுக்கள் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு பிரதான காரணியாகும்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பிரசார மேடைகளில் ராஜபக்ஷர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்குமாறு ஜனாதிபதியிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். உகண்டாவில் பதுக்கி வைத்திருப்பதாக குறிப்பிடும் நிதியை நாட்டுக்கு கொண்டு வந்து அரசுடமையாக்குங்கள், முறையான விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அர்ச்சுனாவுக்கு எதிரான முறைப்பாடு; விசாரணைகள் ஆரம்பமாகவில்லை!



கொழும்பு, நவ. 25

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதனின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் அவருக்கு எதிராக சி.ஐ.டியினரிடம் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர் பில் விசாரணைகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர் முகநூலில் பதிவு செய்த கருத்து தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சிலர் சி.ஐ.டியினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். எனினும் விசாரணைகள் ஆரம்பமாகவில்லை என அவர் குறிப்பிட்டார்.

ஒரு வாரத்திற்குள் நாங்கள் இதனை முழுமையாக ஆராயவேண்டும் என தெரிவித்துள்ள அவர், சி.ஐ.டியின் இயக்குநரிடம் முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளனர். சி.ஐ.டியினர் அடுத்த சில நாட்களில் இது குறித்து தீர்மானிப்பார்கள் என அவர் கூறினார். (அ)

## சீரற்ற காலநிலை; 15,622 பேர் பாதிப்பு

### வடக்கில் அதிகளவானோர் சிரமம்

கொழும்பு, நவ. 25

**மழையுடனான காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு உள்ளிட்ட அனர்த்தங்களால் 3 மாகாணங்களைச் சேர்ந்த 15,622பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**

அதற்கமைய, வட மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7,025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 29 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் 365 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7,854 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 399 பேர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று தென்மேற்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## அதானி குழுமத்தின் திட்டங்கள் குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லை!

### மின்சார சபையின் பேச்சாளர்

கொழும்பு, நவ. 25

அதானி குழுமத்திற்கு எதிரான அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து உலக நாடுகள் அதன் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் இலங்கை அதானி குழுமத்தின் மீள்சக்தித் திட்டங்கள் குறித்து இன்னமும் இறுதிமுடிவை எடுக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னார் பூநகரியில் அதானி குழுமத்தின் மீள்சக்தி திட்டங்கள் குறித்து ஆராய்ப்படுவதாகவும் எனினும் அவை குறித்து இன்னமும் இறுதிமுடிவை எடுக்கவில்லை எனவும் இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தனுஸ்க பராகிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காற்றாலையின் திட்டம் குறித்த யோசனைகள் எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை அதனை ஆராய்ந்து இறுதிமுடிவை எடுக்கும்,இந்த திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் ஆராயும் நிலையில் உள்ளோம்,நிதிரீதியான சாத்தியப்பாடு சூழல் பாதுகாப்பு குறித்தும் ஆராய்கின்றோம் என இலங்கை மின்சாரசபையின் பேச்சாளர் தனுஸ்க பராகிரமசிங்க கூறினார்.

இவ்வாறான பாரிய திட்டங்கள் குறித்து வெளிப்படை தன்மை பொறுப்புக்கூறல் அவசியம் என மேலும் தெரிவித்துள்ள அவர் அதானி குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்த சர்வதேச கரிசனைகள் காரணமாக வெளிப்படை தன்மை அவசியம் என தெரிவித்தார். (அ)

## பத்து அம்சங்களை முன்வைத்து ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம்!

### முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அனுப்பினார்

கொழும்பு, நவ. 25

புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதன் ஊடாக இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினைக் காணுதல் உட்பட பத்தம்சங்களை முன்வைத்து சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான ஜயசூரிய கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மக்கள் வழங்கிய ஆணையை அனைத்து தரப்பினரும் மதிக்க வேண்டும் என்பதோடு நாட்டில் தேசிய ஒற்றுமை, சாந்தி, சமாதானத்தினை நிலைபெறச்செய்து சுபீட்சமான நாட்டில் அனைவரும் அச்சமின்றி இலங்கையர்களாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதனடிப்படையில் பின்வரும் விடயங்களில் அதிகமான கவனத்தினைக் கொள்கின்றேன்.

குறித்த விடயங்கள் வருமாறு-

1. ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசாங்கத்தின் முதற் செயல்பாடாக நாட்டின் ஜனரஞ்சக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சட்டத்தை மதிக்கும்ரூபவ் திறமையான பொதுநிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். விசேடமாக இலங்கையில் 14 பேருக்கு ஓர் அரச ஊழியர் என்ற விகிதம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

2. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றை தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய அரசியலமைப்பு தொடர்பில் எட்டாவது ஆவது பாராளுமன்றம் சிறப்பான பணியை செய்துள்ளது. லால் விஜேநாயக்க மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவராக இருந்ததோடு மட்டுமன்றி அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தவராகவும் உள்ளார். அந்த வகையில் தற்போதைய தருணத்தில் அந்தச் செயற்பாட்டில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே முடிக்க வேணடியுள்ளதால் அந்த விடயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

4. தேசிய இனப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். தேசியப் பிரச்னைக்கு சமஷ்டித் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே இந்த சிறந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது எதிர்காலச் சந்ததியினரை கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து கட்சி தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

5. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என்பதோடு அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல் முக்கியமானதாகின்றது.

6. அடுத்துவரும் காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளதால்ரூபவ் தேர்தல் முறைமைகள் மற்றும் விதிமுறைகளை திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் பிரியசாத் டெப் கமிஷன் தலைமையிலான தேர்தல் சட்ட திருத்தத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு) அறிக்கையை வெளிப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது.

7. பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள துறைசார் மேற்பார்வைக் குழுக்களை வலுவாகச் செயற்படுத்தப்படும்.

8. அனைத்து சமூகத்தால் வெறுப்படைந்த கட்சி தாவுகின்ற செயற்பாடுகளைத் தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

9. நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இரத்து செய்தல். இந்த விடயத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தின் போது ஜனாதிபதியாகிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இறுதிக்கட்டமாக அமையும் என்று பல சந்ஹர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கொள்கை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி தற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தை திடீரென ஒழிக்க முடியாவிட்டாலும், அரசாங்கத்தின் இருப்பை ஒரு குறித்த திகதியை சாதாரண பொதுமக்களுக்கு வாக்குறுதியை வழங்கினால் அது அரசாங்கத்தின் கௌரவத்திற்கும் ஜனாதிபதியின் நற்பெயருக்கும் மேலும் வழிவகுக்கும்.

10. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம். சம்பந்தமான கோவை 25 ஆண்டுகளுக்குப் பிறகுரூபவ் 8ஆவது பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டு முறைமை தயாரிக்க முடிந்தது. பிமல் ரத்நாயக்க மிகவும் பெறுமதியான பணியை செய்தார். அதன் அடிப்படையில் ஒழுக்கக் கோவையின் சிலவிதிகளை உள்வாங்க முடியும். இல்லையேல் அவற்றை முழுமையாக அமுலாக்க முடியும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு வரை நிலவிய சர்வாதிகார ஆட்சியை மாற்றுவதற்கு வணக்கத்திற்குரிய மாதுலுவே சோபித தேரரின் தலைமையில் சமூகத்திற்கான தேசிய இயக்கம் பல்வேறு நடவடிக்கைளை முன்னெடுத்திருந்தது. அந்த வகையில் தற்போதும் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும், அனைவரும் இலங்கையர்களாகவும் வாழ்வதற்காக நாம் எந்தவிதமான அரசியல் இணைந்து செயற்பட்டதை நாம் நினைவுகூருகின்றோம். எமக்கு எந்தவொரு அசரியல் நோக்கங்களும் இல்லை என்பதோடு இந்தப் பணியை முன்னெடுப்பது மிகவும் அசியமானது - என்றுள்ளது. (அ)

## உள்ளூராட்சித் தேர்தல் திகதி அடுத்த மாதமளவில் அறிவிப்பு

### தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் அமீர் பாயிஸ்

கொழும்பு, நவ. 25

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதியை அடுத்த மாதமளவில் அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதோடு ஏற்கனவே கோரப்பட்டுள்ள வேட்புமனுக்கு அமைவாகவே வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஆணைக்குழு சட்ட அதிகாரம் காணப்படுகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரான சட்டத்தரணி அமீர் பாயிஸ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் கருத்துக்களை வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் ஏலவே கோரப்பட்டு கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. எனினும் குறித்த காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான நிதி திறைசேரியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து தேர்தல் நடத்தப்படாமைக்கு எதிராக பிரஜைகளால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்ப்பு அமைவாக ஏற்கனவே வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில் அதன் தொடர்ச்சியாக தேர்தலை முன்னெடுப்பதற்கே ஆணைக்குழுவுக்கு சட்ட ரீதியான அதிகாரம் காணப்படுகின்றது.

அத்துடன், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடுத்து நாம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது 30-35 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு தேவையென்று குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது, ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். பெரும்பாலும் எதிர்வரும் வருடத்தின் முதலிரு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுவதற்கே வாய்ப்புக்கள் உள்ளன - என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org